கல்வாரி மலையிலே கள்வர்கள் நடுவிலே கண்டேன் உம் காட்சியைக் கண்கள் கலங்கிடவே கை காலில் ஆணியும் கரைந்தோடும் குருதியும் கர்த்தா உம் கதறல்கள் உள்ளம் உடைத்திடுதே



[illegible]

கயவர்கள் சூழ்ந்திட்டும் கனிவான வார்த்தையால் கர்த்தாவே மன்னியும் என்று உரைத்தவரே களைத்தோரைத் தேற்றிடும் கருணைக் கடலையும் களைத்தோராய்க் காண்பது காணா துயரமதே





சிறையுற்ற மாந்தரை சீராக்கும் சீலனே சிறுமை அடைந்தோராய் சிலுவை சுமந்தீரே சிரசில் முள்முடியுடன் சிவந்த மேனியுடன் சிலுவையில் தொங்கியே ஜீவனைத் தந்தவரே